**மாத்தளை மாநகர சபை**
**மாத்தளை மாவட்டம்**

---------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜூன் 12 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மாத்தளை மாநகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் இருந்து வரும் செயற்படுத்தப்படாத மற்றும் கோவைகள் இனங்காணப்பட முடியாத 10 நிர்மாண வேலைகளுக்குரிய நிர்மாண கடன்கொடுத்தோர் மீதியான ரூபா 2,301,118 ஆலும் கடன்கொடுத்தோர் மூலதனச் செலவினம் கூடுதலாக காண்பிக்கப்பட்டடிருந்தது.

(ஆ) 7 கணனிகளின் கிரயம், கணனி வலையமைப்பினை ஸ்தாபிப்பதற்கு உரிய செலவினம் மற்றும் உள்ளக தொலைபேசி முறைமைக்கான செலவினமான ரூபா 1,319,530 கூட்டுப்பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் சபை நிதியத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 7,051,284 பெறுமதியான நிர்மாண செலவினம் மீண்டெழும் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க வேண்டிய ரூபா 557,818 ஆன கடன் மீதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,366,962 என காண்பிக்கப்பட்டமையால் நானாவிதக் கடன்கொடுத்தோர் ரூபா 809,144 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்குரிய கிடைக்க வேண்டிய வாடிவீட்டு வாடகை வருமானம் ரூபா 593,141 ஆக இருந்த போதிலும், ரூபா 741,426 ஆக கணக்கீடு செய்தமையால் ரூபா 148,285 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) ஆண்டின் இறுதியில் ஓய்வூதிய திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 15,234,435 ஆன பங்களிப்புத் தொகை நிதிக்கூற்றுக்களில் ரூபா 14,618,675 எனக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 615,760 ஆல் கடன்கொடுத்தோர் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) பௌதீக ரீதியில் காணப்படாத 10 வாகனங்கள் மற்றும் கழிவுப் பொருட்கள் வண்டில்களின் பெறுமதி மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிக் கணக்கில் காட்டியமையால் அக்கணக்கின் மீதி ரூபா 2,875,508 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2017 ஆம் ஆண்டில் இலங்கை வங்கியில் முதலீடு செய்யப்பட்டிருந்த நிலையான வைப்பு மீதிக்குரிய 4 ஆவது காலாண்டின் முதலீட்டு வட்டி ரூபா 209,237 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 6,986,965 ஆன கைத்தொழில் மானியங்கள் நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,332,520 என கணக்கீடு செய்தமையால் நிர்மாணக் கைத்தொழில் மானியம் ரூபா 1,654,445 குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

---

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 92,595,357 கூட்டுத்தொகையான 6 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றிற்கான துணைப்பதிவேடு மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளின் இடையே வேறுபாடுகள் காணப்பட்டதுடன் அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 27,346,416 ஆக இருந்தது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

---

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 13 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை 80,618,337 ஆக இருந்ததுடன், அதில் 8 கணக்கு மீதிகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்யாமல் காணப்படும் ரூபா 1,676,967 ஆன மீதிகளும் அதில் உள்ளடங்கியிருந்தன.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 3 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 113,534,099 ஆக இருந்ததுடன், சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்யாமல் காணப்படும் ரூபா 82,655,707 ஆன மீதிகளும் அதில் உள்ளடங்கியிருந்தன.

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை**

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக 5 கணக்கு விடயங்களுக்கான கூட்டுத்தொகை ரூபா 9,681,993 ஆன மீதிகள் கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாமல் இருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1989 சனவரி 20 ஆந் திகதிய 541/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நிறைவேற்றப்பட்ட உப உறுப்புரையின் III ஆம் பகுதியின் 15 ஆம் பிரிவு<br>(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | சபைக்குரிய காணி கட்டிடங்கள் மற்றும் ஏனைய நிலையான சொத்துக்கள் தொடர்பாக நாளதுவரையான பேணப்பட்ட அறிக்கை காணப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் (4) | 2016 நவம்பர் 4 ஆந் திகதி எக்ஸ் மோட்டர் இயந்திரம் விபத்துக்கு உட்பட்டமை தொடர்பில் ஆரம்ப அறிக்கை விபத்து இடம்பெற்று 8 மாதங்களும் 13 நாட்களும் கடந்ததன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இயந்திரம் ரூபா 222,525 இற்கு திருத்தம் செய்யப்பட்டு காப்புறுதியிலிருந்து மீள அளிக்கப்படாத ரூபா 110,525 தொகை சபை நிதியத்தினால் செலவிடப்பட்டிருந்த போதிலும், 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் இழப்பிற்குரிய முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.<br><br>2017 மே 29 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்ட மோட்டார் வாகனம் உரிய முகவர் நிறுவனத்திற்கு தொடர்புபடுத்தி ரூபா 2,135,600 ஆன திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. காப்புறுதியிலிருந்து மீளளிக்கப்படாத ரூபா 283,237 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்த போதிலும், தேவைக்கான பரிசோதனை மேற்கொண்டு முழு அறிக்கையொன்று 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 571 | வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டிய ரூபா 675,000 ஆன 4 மீதிகள் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 1645(ஆ) மற்றும் 1646 | மாநகர சபைக்குச் சொந்தமான ஓட்டநிலைமையில் காணப்படும் 8 வாகனங்களின் ஓட்டப்பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

(இ) பொது நிர்வாக சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| (i) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்கு சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | 25 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2017 திசெம்பர் 07 ஆந் திகதிய 33/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை | வெளிக்கள கடமைகளில் ஈடுபட்டுள்ள நிர்மாண பிரிவிற்கு இணைக்கப்பட்ட இரண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்கால திட்டங்கள், திருத்திய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செய்யப்பட்ட வேலை சமர்ப்பிக்கப்படாமையால் அவர்கள் நிறைவேற்றிய கடமைகள் தொடர்பாக சரியானதன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. |

(ஈ) ஏனைய சுற்றறிக்கை

| | |
|---|---|
| 1991 மார்ச் 26 ஆந் திகதிய 3/91 ஆம் இலக்க மத்திய மாகாண பிரதம செயலாளரின் சுற்றறிக்கை | நகர சபையின் நிர்மாண பிரிவிற்குரிய நிறைவேற்று உத்தியோகத்தர்கள் மற்றும் எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வெளிக்கள உத்தியோகத்தர்களால் தமது எதிர்கால நிகழச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு முன்னைய மாதத்தின் 25 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டெழும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 63,175,930 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 47,092,890 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி மற்றும் வரி | 36,150,000 | 36,221,114 | 24,756,470 | 23,836,699 | 36,150,100 | 36,202,989 | 24,165,081 | 23,718,426 |
| வாடகை | 18,671,000 | 19,110,584 | 16,528,021 | 4,167,134 | 25,522,000 | 17,386,895 | 14,399,804 | 3,088,592 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 8,033,000 | 10,647,215 | 10,089,290 | 14,000 | 6,233,000 | 10,672,158 | 10,594,038 | 77,000 |
| ஏனைய வருமானம் | 45,483,600 | 60,732,943 | 15,311,825 | 52,993,783 | 47,045,900 | 62,283,361 | 24,621,451 | 43,321,278 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாநகர சபை கணக்குப் பிரிவின் கணிப்பீட்டின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டில் கேள்வி மூலம் வழங்கப்பட்டிருந்த சிறப்பங்காடிக் வியாபாரத் தொகுதியின் 14 கடை குத்தகையாளர்களிடமிருந்து 2014 ஆம் ஆண்டின் இறுதிவரை அறவிடப்பட வேண்டிய ரூபா 4,170,527 ஆன ஒரே தடவையில் செலுத்தும் பணம் அறவிடப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரை 10% தாமதக் கட்டணம் உட்பட ரூபா 18,860,263 அறவிட வேண்டியிருந்தது.

(ஆ) மாநகர சபையினால் நடாத்திச் செல்லப்படும் நீர் வழங்கல் முறைமை 2001 ஆம் ஆண்டின் தேசிய நீர் வடிகாலமைப்பு சபைக்கு கையேற்கப்படும் சந்தர்ப்பம் வரையில் அறவிடுவதற்கு இருந்த ரூபா 4,802,812 ஆன நிலுவை நீர்க்கட்டண மீதி மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடுவதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 வீதவரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் நிலுவை வீதவரி மீதி ரூபா 23,836,699 காணப்பட்டது.

(ஆ) சபையினால் வீதவரி வருமானப் பதிவேடு பேணப்படாததன் பேரில் மேற்குறித்த பற்றாக்குறை தொடர்பான காலப்பகுப்பாய்வொன்றை பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்ததுடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கணனி நிகழ்ச்சித்திட்டத்தின்

பிரகாரம் எதிர்வரும் ஆண்டிற்கான கொடுப்பனவு இனங்காணும் நடைமுறையொன்று காணப்படவில்லை.

(இ) 2011 ஆம் ஆண்டில் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து வீதவரி மதிப்பீட்டின் போது ஆட்கள் வீட்டில் காணப்பட்டதன் பேரிலும் உரிமையாளர் இனங்காணப்படாத ஆதனங்களுக்காக ‘‘உரிமையாளராக’’ குறிப்பிட்டு வீதவரி பட்டியலிடல் மற்றும் அந்த உரிமையாளர்களை இனங்கண்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள முடியாததன் காரணமாக தெரிவுப் பரிசோதனைக்கு உட்பட்ட 08 பிரதேசங்களில் உரிமையாளராக குறிப்பிடப்பட்டிருந்த 364 வரி அலகுகளில் 2017 யூன் 30 ஆந் திகதிய உள்ளவாறு வீதவரி மீதி ரூபா 1,251,067 ஆக இருந்தது.

(ஈ) 11 ஆம் இலக்க பிரதேசத்தில் கண்டுபிடிக்க முடியாதென குறிப்பிட்டிருந்த 08 ஆதனங்களுக்குரிய 54,956 ஆன நிலுவை மீதியொன்றும் 2011 ஆம் ஆண்டு முதல் இருந்த வரும் 10 மற்றும் 11 ஆம் இலக்க பிரதேசங்களில் மூடப்பட்ட 17 ஆதனங்களுக்குரிய ரூபா 186,213 ஆன நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 9 ஆம் இலக்க பிரதேசத்தில் சபை அங்கீகாரமின்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த 34 அனுமதியற்ற கட்டிடங்கள் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாதிருக்கையில் வீதவரி இலக்கமும் வழங்கி அக்கட்டிடங்கள் சட்டரீதியாக்கப்பட்டிருந்தன. 2017 மே 30 ஆந் திகதியில் உள்ளவாறு அக்கட்டிடங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வீதவரி ரூபா 70,049 ஆக இருந்தது.

### 2.2.4 வாடகை வருமானம்

------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகை மீதி ரூபா 4,167,133 ஆக இருந்ததுடன், நீண்டகாலமாக நிலுவை வருமானம் தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலுவை அறை வாடகை கொடுப்பனவு செய்யப்படாததன் பேரில் கொங்காவல மற்றும் அம்பகஹமுல வர்த்தக தொகுதிகளின் கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டிருந்ததுடன், 04 கடைகளிலிருந்து 1 இற்கும் 3 இற்கும் இடைப்பட்ட ஆண்டுகளாக இருந்து வரும் ரூபா 204,745 தொகையும் 7 கடைகளிலிருந்து 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 207,892 தொகயான நிலுவை வீதவரி மீதியொன்றும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மீச்சத்தை கடைத்தொகுதியின் 03 கடைகளிலிருந்து நீண்ட காலமாக இருந்து வரும் ரூபா 101,696 ஆன நிலுவை மீதியொன்று கொங்காவெல பழைய கடைத்தொகுதியின் 3 கடைகளுக்காக ரூபா 261,373 ஆன மீதியொன்று அறவிட முடியாமல் காணப்பட்டது.

(ஈ) பிரதான வீதியின் தனியார் சிற்றூண்டிச்சாலையொன்றுக்கு அருகில் காணப்பட்ட லொத்தர் கூடத்தின் உரிமையாளரிடமிடருந்து 4 ஆண்டுகளாக இருந்து வரும் ரூபா 6,120 ஆன நிலுவை மீதியொன்றை அறவிடாமல் இருக்கையில் 2017 ஆம் ஆண்டின் போது 2 லொத்தர் கூடங்களை நடாத்திச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதி வரையில் 09 லொத்தர் கூடங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 69,410 ஆன மீதியொன்று காணப்பட்டது.

(உ) டெலிகொம் நிறுவனத்தினால் மாத்தளை மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படும் 17 தொலைபேசி கூடங்களுக்காக 2014 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 25,336 ஆன தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2007 ஆம் ஆண்டு முதல் 04 நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 307,281 ஆன மலசலகூட வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 322,800 மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 48,402,960 ஆன தொகை அறவிடப்பட வேண்டியதாக இருந்தது.

### 2.2.6 மிகை அறவீடு

மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) கீழ் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்டிருந்த மிகை விதிப்புக்களின் தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 96,851 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் நலனோம்பல், வசதி மற்றும் நலன்புரியின் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தலுடன் தொடர்புடையதாகவுள்ள அனைத்து விடயங்களினதும் கட்டுப்பாடு மற்றும் நிர்வாகத்தில் சபை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடையாமை

சபை நிதியத்திலிருந்தும் வெவ்வேறு நிதி ஏற்பாடுகளின் கீழ் 03 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 5,038,749 செலவிடப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடையாதிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | செயற்பாடு | மதிப்பீட்டு தொகை / நிதிஏற்பாடு | நிறைவேற்றப்பட்ட அளவின் பெறுமதி | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|---|
| (i) | போலந்தபிட்டியவில் காணப்பட்ட பழைய சிகிச்சை நிலையக் கட்டிடம் உடைத்து அகற்றப்பட்டு அவ்விடத்தில் புதிய சிகிச்சை நிலையமொன்றை நிர்மாணித்தல்,<br>- சபை நிதியம் மற்றும் உறுப்பினர் ஏற்பாடு | 2,368,905 | 2,219,729 | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய வகையில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்படாதிருந்ததால் சிகிச்சை நிலையத்தை நடாத்திச் செல்ல முடியாதிருந்தது. 900 நலனாலி குடும்பங்களை மேவுகை செய்யக் கூடிய வகையில் சிகிச்சைகளை நடாத்துவதற்காக வேறு தற்காலிக இடமொன்று தெரிவு செய்யப்பட்ட காரணத்தினால் வெவ்வேறு சிக்கல்கள் தோன்றியிருந்தன. |
| (ii) | தோலவீதி சனசமூக மண்டபத்திற்கு அண்மித்த மகப்பேற்று சிகிச்சை பராமரிப்பு நிலையொன்றிற்காக | 2,104,648 | 1,959,447 | (i) நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு 2 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் பாவனைக்கு எடுக்கும் வகையில் பொருத்தமாக வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கட்டிடமொன்றை நிர்மாணித்தல்<br>- சபை நிதியம் | | | (ii) | சிகிச்சைகளை வேறு இட மொன்றில் நடாத்துவதற்கு நேர்ந்தமையால் மருந்துகள், ஆவணங்கள் மற்றும் திரிபோஷா களஞ்சியப் படுத்துவதற்கு போதியளவு இடவசதிகள் காணப்படவில்லை. |
| (iii) | மாத்தளை மாநகர சபையின் சாக்கடை கழிவுப்பொருள் சுத்திகரிப்பு செயற்திட்ட திருத்த வேலை<br>- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு நிதிஏற்பாடு | 4,307,237 | 859,573 | (i) | 2007 ஆம் ஆண்டின் ஜேர்மன் உதவியின் கீழ் ரூபா 1,500,000 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட ஹிக்கொல்ல மலசலகூட முறைமை செயற்பாடு நிலைமையில் இல்லாமையால் அதனை திருத்தம் செய்தவற்கு 2015 யூன் 23 ஆந் திகதி தீர்மானிக்கப்பட்டு ஆந் திகதி முதல் 8 மாதங்கள் அளவிலான காலதாமத்துடன் மதியுரை சேவை பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. |
| | | | | (ii) | மதியுரை சேவை நிறுவனம் சமர்ப்பித்த கூறுவிலைகளை தெரிவு செய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு அறிக்கையொன்றாக இல்லா ததுடன் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கிரய மதிப்பீடு கருத்திற் கொள்ளப்பட்ட மைக்கான சான்றுகள் காணப்படவில்லை. |
| | | | | (iii) | 2018 யூலை 8 ஆந் திகதி வரை மொத்த கிரய மதிப்பிட்டின் 10 சதவீதமான வேலைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது |

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்ளாமை**

---

இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட கணக்காய்வு மென்பொருளுக்காக கணனி வலையமைப்பை ஸ்தாபிப்பதற்காக ரூபா 971,530 செலவிடப்பட்டிருந்த போதிலும் ஸ்தாபிக்கப்பட்ட வலையமைப்பிற்கு போதியளவு இணையத்தள வசதிகள் வழங்கப்படாமை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(இ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

---

முன்னைய ஆண்டில் மாகாண சபைகள் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் சபைக்குரிய வாகனங்கள் பிரிவினை நவீன மயப்படுத்தும் நிர்மாண வேலைகளை ஆரம்பித்து அதற்காக ரூபா 4,058,881 செலவிடப்பட்டிருந்தது. எனினும் மொத்தக் கிரய மதிப்பீட்டின் 29 சதவீதம் அளவிலான வேலைப்பகுதியொன்று பூர்த்தி செய்யப்பட்டு நிர்மாண வேலை

நிறுத்தப்பட்டிருந்தமையால் அரைப்பங்கு பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டது.

**(ஈ) செயற்பாடுகளை நிறைவேற்றுதல் தாமதம்**

பாதீட்டின் மூலம் ரூபா 2,500,000 ஆன நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மீச்சந்தை வியாபார தொகுதியின் திருத்த வேலைகள் மற்றும் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் ஆண்டில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 125,500,000 தொகையான 5 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை.

**(உ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) 2015 ஆம் ஆண்டின் போது பிளிசறு செயற்திட்ட உதவிகள் கீழ் ரூபா 9,343,457 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட ஹிக்கொல்ல கழிவுப்பொருள் பிரிவில் சேதனப் பசளை உற்பத்தி நடவடிக்கைகள் 2016 யூலை முதல் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 2018 யூன் 15 ஆந் திகதி முதல் சேதனப்பசளை உற்பத்தி நடவடிக்கை நிறுத்தப்பட்டிருந்தது.

(ii) மாநகர சபையினால் நாளாந்தம் சேகரிக்கப்படும் 4 தொன் அளவிலான உக்கும் கழிவுப்பொருட்கள் சேதனப் பசளை உற்பத்தி செய்யப்படக் கூடிய வகையில் முறையான கொம்போஸ்ட் குழிகளில் பொதியிடாமல் முறையற்ற விதத்தில் சுற்றாடல் பிரச்சினை ஏற்படக் கூடிய வகையில் பிரிவிற்கு அண்மையில் திறந்த வெளியில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. சேதனப் பசளை செயற்திட்டத்திற்கான மத்திய சுற்றாடல் அதிகார சபை மூலம் மாநகர சபைக்கு வழங்கப்பட்டிருந்த 2015 யூலை 15 ஆந் திகதிய CEA - B - 01132 (RO) ஆம் இலக்க அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட 2.3, 2.4, 2.5, 2.7 மற்றும் 2.8 ஆம் பிரிவுகளிலுள்ள நிபந்தனைகள் மீறப்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(iii) கழிவுப் பொருள் வெளியேற்றப்படும் வாரியபொலவத்த தனியார் காணியொன்று தொடர்பாக பிரதேச வாதிகள் எதிர்ப்புக் காரணமாக சபைக்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கிற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் வழக்கு கட்டணமாக ரூபா 3,515,919 செலவிடுவதற்கு நேர்ந்திருந்தது. இச்சிக்களுக்கு தீர்வொன்றாக கழிவுப்பொருள் வெளியேற்றுவதற்காக 2010 ஆம் ஆண்டில் ரூபா 2,000,000 செலவிடப்பட்டு காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டு அங்கு ஆரோக்கிய கழிவுப்பொருட்களை நிரப்பும் அடிப்படை சாத்தியவளமொன்றும் திட்டத்தையும் தயாரிப்பதற்காக ரூபா 400,000 செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அக்காணிக்கு முறையாக கழிவுப்பொருள் வெளியேறும் நடைமுறையொன்றை ஆரம்பிப்பதற்கு தவறியிருந்தது.

**(ஊ) சுற்றாடல் சிக்கல்கள்**

2015 ஆம் ஆண்டு முதல் மலசல கூட முறைமை செயற்படாதுள்ளது என அறிந்திருக்கையில் 2018 சனவரி 12 ஆந் திகதி வரையிலும் சபையின் களி பௌசர் மூலம் அகற்றப்படும் மலக்கழிவுகள் இச் செயற்படாத இடத்தில் இடப்பட்டதன் காரணமாக சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக சபையில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் பற்றி சபை தெரிந்துகொள்ளாமையால் அந் நோக்கங்களுக்கான உலகலாவிய குறிகாட்டிகள் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 யூன் 30 ஆந் திகதி அளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டில் சபையின் வாகனப் பிரிவினை நிர்மாணிப்பதற்காக கிடைத்திருந்த ரூபா 915,007 ஆன நிதி ஏற்பாடு தீர்வு செய்யப்படாமல் வைப்பு பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வருடக் கணக்காக தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் இருந்து வரும் ரூபா 181,310 தொகையான 3 மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாத்தளை மாநகர சபைக்குரிய தமகாவா விடுமுறைக் கேந்திரத்தின் வருகை பதிவேடு 2016 யூன் 20 ஆந் திகதியின் பின்னர் வருகை தந்த விருந்தினர் தொடர்பாக எவ்வித பதிவொன்றும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. கேந்திரத்தில் அறைகளை வழங்குவது தொடர்பாக பொறுப்பாளரால் 07 சந்தர்ப்பங்களில் அறவிடப்பட்டிருந்த ரூபா 14,661 ஆன கட்டணங்கள் நகர சபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. கேந்திரத்தில் முன்கூட்டி ஒதுக்கீடு செய்யும் விண்ணப்பங்களுக்காக உரிய உத்தியோகத்தரொருவரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் நடைமுறையொன்றும் காணப்படவில்லை.

அவ்வாறே தமகாவா விடுமுறைக் கேந்திரத்தின் அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வருமானம் திட்டவட்டமாக மதிப்பீடு செய்யப்படாமல் இருந்ததுடன், வருடாந்தம் செலவிடப்படும் மின்சாரம், நீர், ஊழியர் சம்பளம் மற்றும் மேலதிகச் செலவினம் என்பவற்றை கருத்திற் கொள்ளும் போது வருமானம் உழைக்கும் நோக்கில் நடாத்திச் செல்லும் இந் நிலையத்திலிருந்து நகர சபைக்கு நட்டமொன்று இடம் பெற்றுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

சபையின் நகர ஆணையாளர் பதவி 1 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாக காணப்பட்டு வருவதுடன் சபையின் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட 27 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன.

## 3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) (i) மாநகர சபையின் அதிகாரப்பிரதேசத்தில் 11 ஆம் பிரதேசத்தின் பைப்லோன் பகுதியிலான வயலொன்று முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் நிறைக்கப்பட்டு பிரித்து ஆட்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அக்காணியை தூண்டாக்கல் தொடர்பில் 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 20, 21 மற்றும் 22 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 செப்தெம்பர் 9 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டு வெளிக்களப் பரிசோதனையின் பிரகாரம் சபையின் அங்கீகாரம் இன்றி அங்கு 80 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், 2011 ஆம் ஆண்டில் இடம் பெற்ற வீதவரி

மதிப்பீட்டின் போது இந்த அனுமதியற்ற 41 வீடுகளுக்காக வீதவரி அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டு மற்றும் 2017 செப்தம்பர் 30 ஆந் திகதி வரை முறையே 13 மற்றும் 22 சந்தர்ப்பங்களின் போது ரூபா 281,633 மற்றும் ரூபா 641,152 அத்துமீறிய நிர்மாணத்தை சட்ட ரீதியாக்குவதற்கு கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்ததுடன், முறைபாட்டாளர்கள் மற்றும் ஏனைய வழிகளில் கிடைத்த தகவல்களின் பேரில் அனுமதியற்ற கட்டிடங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக முறையான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) சபை நடாத்திச் செல்லும் 5 தாய் மற்றும் சேய் சிகிச்சை நிலையங்களின் கட்டிட வசதிகள் போதியதாக இல்லாமை, சுகாதார பாதுகாப்பாக மருந்துகளை பாதுகாத்தல், மற்றும் சுகாதார வெளியீடுகளை வைத்துக்கொள்வதற்காக வசதிகள் இல்லாமை, நலனாளிகளுக்காக சிகிச்சை வழங்கும் சந்தர்ப்பத்தில் தங்குமிட வசதிகள் இல்லாமை, போதிய ஆரோக்கிய வசதிகள் இல்லாமை போன்ற குறைபாடுகள் காணப்பட்டமையால் சிகிச்சை நிலையங்களிலிருந்து மிகவும் ஆக்கபூர்வமான சேவையொன்று வழங்க முடியாதிருந்தது. இக்குறைபாட்டை சீர் செய்வதற்காக சுகாதார பிரிவின் மூலதன சொத்துக்கள் திருத்தம் மற்றும் பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 200,000 நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) புகையிரத திணைக்களத்திற்குரிய 4680 சதுர அடி அளவிலான நில அளவொன்றுடனான பொருட் களஞ்சியத்தில் பொது வர்த்தக தொகுதியொன்றை தீர்மானிப்பதற்காக குத்தகை அடிப்படையில் கையளிப்பதற்கு புகையிரத திணைக்களம் இணங்கி நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதி ஏற்பாட்டின் கீழ் கட்டிடங்களினை நவீனப்படுத்துவதற்கு 2016 யூன் வரை ரூபா 4,295,086 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2017 ஒக்தோபர் 9 ஆந் திகதி வரையிலும் கட்டிடத்தின் கதவுகளை பொருத்துதல் மற்றும் மேல் மாடியில் கடைகளை வேறாக்குதல் இடம் பெறாமல் பாதுகாப்பற்ற கட்டிடமொன்றாக காணப்பட்டது. கட்டிடத்தை பயன்படுத்துவது தொடர்பாக 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் புகையிரத திணைக்களத்துடன் முறையான குத்தகை உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 நந்தமித்ர ஏக்கநாயக்க சர்வதேச ஹொக்கி விளையாட்டரங்கு

(அ) மத்திய மாகாண சபையில் 2002 செப்தெம்பர் 11 ஆந் திகதி அமைச்சரவை கூட்டத்தின் போது மேற்படி விளையாட்ரங்கினை நகர சபைக்கு கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக 2002 நவம்பர் 11 ஆந் திகதிய மத்திய மாகாண பிரதம அமைச்சு செயலாளரின் கடிதத்தின் மூலம் அறிவித்து 15 வருட காலம் கடந்திருந்த போதிலும் விளையாட்டரங்கை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் விளையாட்டரங்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மாத்திரம் நகர சபையால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 128(1)(உ) பிரகாரம் அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் உள்ள சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். எனினும் விளையாடுவதற்கு பொருத்தமற்ற சிதைவடைந்திருந்த 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இயற்கையான திடலில் இயற்கை ஆடுகளத்தில் தேவையான புனரமைப்பு வேலைகளை செய்வதற்கும் அல்லது அதற்காக அதிகாரிகளின் கவனத்தை செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்து சர்வதேச ஹொக்கி வியைாட்டரங்கு விளையாட்டுப் போட்டிகளுக்காக பயன்படுத்தி ஆக்கபூர்வமான பயன்பாட்டிற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 பயன்படுத்தப்படாத குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போதும் ஏலவிற்பனை செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த ரூபா 2,132,676 பெறுமதியான 3 வாகனங்களை ஏலவிற்பனை செய்வதற்கு நடவடிக்க எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தமது மேற்பார்வையின் கடமை புரியும் சகல ஊழியர்களின் விடுமுறைப் பெற்றுள்ள வார இறுதி மற்றும் பகிரங்க விடுமுறை தினங்களில் மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக தொழில்நுட்ப உத்தியோத்தரால் நிறைவேற்றப்பட்ட கடமைக்கு உட்பட்டு எடுக்கப்படும் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக தவறாக குறிப்பிட்டு சபையின் வேலை காப்பாளர் ஒருவருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 91,065 ஆன மேலதிக படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.7 வெளிப்படையான மோசடிகள்

கொங்காவெல புகையிரத களஞ்சிய வர்த்தக தொகுதியை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகளுக்காக சபையிலிருந்து வழங்கும் இயந்திரங்கள் உபகரணங்களுக்கு இடையே களஞ்சியத்திற்கு கையளிக்கப்படாத 18 உபகரணங்கள் மற்றும் காணாமல் போயிருந்த ரூபா 71,925 பெறுமதியான 2 இயந்திரங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 103, 104, 104(4) மற்றும் 105 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.8 பெறுகை செயற்பாடு

### 3.8.1 பெறுகை திட்டம்

அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 இன் பிரகாரம் பிரதான பெறுகை திட்டமொன்று, சிவில் வேலைகள், பொருட்கள் மற்றும் ஏனைய சேவைகள் உள்ளடக்கப்பட்ட விரிவான பெறுகை திட்டமொன்று மற்றும் பெறுகை வழிகாட்டி கோவையின் 4.2.3 இன் பிரகாரம் கால அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.8.2 வழங்கல் மற்றும் சேவைகள்

(அ) புதிய உள்ளக தொலைபேசி முறைமையொன்றை நிமாணிப்பது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையின் ஸ்தாபிக்கப்பட்டிருந்த உள்ளக தொலைபேசி முறைமையில் காணப்பட்ட வளங்கள் மற்றும் சில பகுதிகள் செயற்படாததன் காரணமாக புதிய முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்காக மாநகர ஆணையாளரின் வேண்டுகோளின் பிரகாரம் டெலிகொம் நிறுவகத்திலிருந்து ரூபா 789,498 ஆன மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஏப்ரல் 5 ஆந் திகதிய 8.1.3 ஆம் இலக்க சபை தீர்மானத்தின் பிரகாரம் தொடர்பாடல் சேவைகளை வழங்கும் வேறு 4 நிறுவனங்களிடமிருந்து உரிய விதந்துரைகள் தயாரிக்கப்படாமல் விலை கோரப்பட்டிருந்தன.

(ii) சமர்ப்பிக்கப்பட்ட ஒரு நிறுவனமொன்றின் கூறு விலை அடிப்படையில் புதிய விலை கோரலொன்று மேற்கொள்ளாமல் டெலிகொம் நிறுவனத்தினது விலைகள் மற்றும் வழங்கப்படும் சேவையின் தரத்துடன் ஒப்பிடப்படாமல் தெரிவுசெய்யப்பட்ட தனியார் நிறுவனத்திடமிருந்து ரூபா 338,000 இற்கு பதிய தொலைபேசி முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருந்தது..

(iii) டெலிகொம் நிறுவனத்தினால் ஸ்தாபிக்கப்பட்டிருந்த பழைய உள்ளக தொடர்பாடல் இணைப்பினை சேவை புரிவதற்காக மாதாந்தம் கொடுப்பனவு செய்யப்படும் ரூபா 1,169 தொகையை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கொடுப்பனவு செய்தமை காரணமாக பெற்றுக்கொள்ளாத சேவையொன்றுக்காக 2017 யூலை முதல் 2011 ஏப்ரல் வரை ரூபா 8,183 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீச்சந்தை வர்த்தக தொகுதியின் இரண்டாவது மற்றும் மூன்றாம் மாடிகள் குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்க்பட்டன.

(i) பெறுகை வழிகாட்டல் முகாமையின் 5.6 இன் பிரகாரம் கேள்வி கோரலின் போது கேள்விதாரருக்கு நியாயமான அடிப்படையில் போட்டி கூறு விலை சமர்ப்பிக்க கூடிய வகையில் தேவையான சகல விபரங்களையும் விதந்துரைகளுடன் திட்டவட்டமான தகவல்கள் குறிப்பிடப்படாமல் 2013 பெப்ரவரி 22 ஆந் திகதி மும்மொழிகளிலும் செய்திப் பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தது. ஆதலால் கொள்வனவாளர் எவரும் கூறுவிலை சமர்ப்பிக்காமல் இருந்ததுடன் விளம்பரத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 153,530 தொகை விளைவற்ற செலவினமொன்றாக இருந்தது.

(ii) கட்டிடத்தில் காணப்படும் நிலைமை தொடர்பாக தெளிவான அடிப்படையொன்றின் கீழ் 20 கடைகளுக்காக விலை மதிப்பிட்டு திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆகக் குறைந்த மாதாந்த வாடகையை அடிப்படையாக கொள்ளப்படாமல் 2014 திசெம்பர் 02 ஆந் திகதி விஷேட பொதுச்சபை தீர்மானத்தின் படி கடைகள் ஒதுக்குவதற்கு எவ்வித ஆரம்ப அடிப்படையொன்றும் திட்டமொன்றும் இல்லாமல் இரண்டு மாடிகளினதும் மொத்த பரப்பளவை கருத்திற் கொண்டு 2014 திசெம்பர் 22 மற்றும் 2015 பெப்ரவரி 09 ஆந் திகதி மீண்டும் கூறுவிலை கோரப்பட்டிருந்தது.

(iii) 2015 மே வரையில் தவறுகளுடன் கூடிய மதிப்பீட்டு நியதிகள் மற்றும் தெளிவற்ற விதந்துரைகள் பயன்படுத்தப்பட்டு கேள்வி ஒப்பிடப்பட்டு 37 கோள்வனவாளர் தெரிவு செய்யப்பட்ட காரணத்தினால் 2018 யூன் வரையிலும் இரண்டு மாடிகளிலும் கடைகளை ஒதுக்கி குத்தகைக்கு வழங்க முடியாமல் இருந்தன.

(iv) மதிப்பிடப்பட்ட வாடகையை அடிப்படையாகக் கொண்டு எதிர் வரும் வேலைகளை செய்யப்படாததன் பேரில் 2016 ஆம் ஆண்டு முதல் 2017 திசெம்பர் வரை சபைக்கு பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த ரூபா 5,850,000 ஆன வாடகை வருமானம் வழங்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த கொள்வனவு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(i) 1989 சனவரி 20 ஆந் திகதி 541/17 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நிறைவேற்றப்பட்ட உப வசதிகளின் V ஆம் பகுதியின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் சகல நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்ட கேள்வி கோரல் மாதிரிப் படிவங்கள் இல்லாமல் 05 சந்தப்பங்களில் ரூபா 205,050 ஆன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) நிறைவேற்றப்பட்ட உப உறுப்புரை v ஆம் பகுதியின் 7 (அ) பிரிவின் பிரகாரம் கிடைத்த ஒவ்வொரு கேள்வி உரைகளில் திகதி முத்திரை இடப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் மற்றும் கடித உரைகள் இல்லாமல் கூறு விலைகள் சமர்ப்பித்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அவ்வாறே கிடைத்த கேள்வி தொடர்பாக பதிவேடொன்று பேணப்படாதிருந்தமையால் கேள்வி

திறக்கும் போது உப உறுப்புரையின் v ஆம் பகுதியின் 8(அ) மற்றும் (இ) பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவில்லை.

(iii) 2017 ஆம் ஆண்டில் வேலைப்பிரிவின் நடவடிக்கைகளுக்காக தேவையான கட்டிடப் பொருட்கள் கொள்வனவிற்காக பதிவு செய்யப்பட்ட நான்கு நிறுவனங்களிலிருந்து முத்திரை இடப்படாத கூறு விலை சமர்ப்பித்த மூன்று நிறுவனங்கள் தொடர்பாக 2017 ஒக்தோபர் 31 ஆந் திகதி மேற்கொண்ட நிலையப் பரிசோதனையின் போது இம் மூன்று இடங்களுக்காக ஒரு வியாபார நிலையமொன்று மாத்திரம் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. ஆதலால் போலியான கூறுவிலைகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு நிறுவனத்திடமிருந்து 2017 சனவரி முதல் யூலை வரையான காலப்பகுதியில் ரூபா 178,725 ஆன பொருட்கள் வெளிப்படையாக இல்லாமல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**3.8.3 ஒப்பந்த நிருவாகம்**

**முன்கலவை இட்டு வீதி நிர்மாணம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முறையான வெளிக்கள பரிசோதனை மூலம் முன்கலவை இட்டு பாரமரிப்பு நடவடிக்கைகள் வீதிகள் இனங்காணப்படாமையால் 2016 ஆம் ஆண்டில் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென மதிப்பிடப்பட்டு ரூபா 1,009,666 பெறுமதியுடன் கூடிய 9 வீதிகள் பராமரிப்பு தேவைப்பாடுகள் ஏற்படாமையல் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சரியான மதிப்பீடு தயாரிக்கும் நடைமுறையொன்று பின்பற்றப்படாததன் காரணமாக 2017 ஆம் ஆண்டில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்ட 6 வீதிகளின் மதிப்பிடப்பட்ட பொருள் அளவுகளுக்கு இடையே பாரியளவில் விலகல் காணப்பட்டதுடன், 2017 ஆம் ஆண்டில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட 6 வீதிகளின் மதிப்பிடப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ள பொருட்களின் அளவுகளுக்கு இடையே 55 சதவீதம் முதல் 79 சதவீதம் வரையான விலகல் காணப்பட்டன.

(இ) 2016, 2017 ஆம் ஆண்டுகளில் வீதி பராமரிப்பு நடவடிக்கைகளில் ரோலரின் பாவனை தேவையான இடங்களுக்கு உலக்கைகளால் பதப்படுத்தல் இடம் பெற்றிருந்தமையால் நிரப்புதல்கள் வீதியில் மேற்பரப்பினை விட கீழிறங்கியிருந்தமையால் குழிகள் உருவாகியிருந்தமை, முன்கலவை இடப்பட்ட இடங்களில் முன்கலவை குறுகிய காலப்பகுதியில் கலன்றுபோதல் என்பன அவதானிக்கப்பட்டன. 2017 யூலை 13 ஆந் திகதி மேற்கொண்ட நிலையப் பரிசோதனையின் போது மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 313,153 ஆன மூன்று வீதிகளில் அவ்வாறான குறைபாடுகள் காணப்பட்டன.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) 6 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே 20 சதவீதம் முதல் 106 சதவீதம் இடைப்பட்ட வீச்சிலான விலகல்கள் காணப்பட்டன.

(ஆ) 20 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,573,630 ஆன நிதிஏற்பாடுகளில் எவ்வித செலவினமொன்றும் செய்யப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தன.

(இ) 44 செலவின விடயங்களுக்குரிய மீளாய்வாண்டின் தேறிய நிதிஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே 50 சதவீதம் முதல் 99 சதவீதம் இடையில் வீச்சளவின விலகல்கள் காணப்பட்டன

(ஈ) 10 செலவின தலைப்புகளின் நிதிஏற்பாட்டு எல்லைகளை மிகைத்து ரூபா 206,624 செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

மா நகர சபை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிக்கு ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்ததுடன், போதியளவு ஆளனி இல்லாமையினால் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய சீபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் கடிதம் மற்றும் 2014 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய மத்திய மாகாண பிரதான செயலாளரின் சீபீசீ/சீஎம்சீ/1/16 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் காலாண்டிற்கு 01 கூட்டம் என நான்கு சந்தர்ப்பங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் ஒரு சந்தர்ப்பத்தில் குழு நடாத்தப்பட்டிருந்தது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | முறைமையின் குறைபாடுகள் |
|---|---|
| (அ) பதவியணியினர் முகாமைத்துவம். | (i) பதவியணியினர் வெற்றிடங்கள் |
| (ஆ) சொத்துக்கள் | (i) சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டமை |
| | (ii) பொருள் மெய்மையாய்வு செய்யப்படாமை. |
| | (iii) பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை |
| | (iv) சொத்துக்களை கையேற்பதற்கும் உரித்தை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமை |
| | (ii) வருமான இலக்கை பூர்த்தி செய்யாமை |